உ

சிவமயம்

சோணகிரிச் சுழி மதுரைத்

# தேவாரப் பூங்கொத்து



1—2—1944

ரமண பாதாநந்தா

சீர்காழி.

சிவமயம்

திருத்தணிகேசன் துணை.

---

# முகவுரை

திருவண்ணாமலை, திருச்சுழியல், திருவாலவாய் என்னும் மூன்று தலங்களுக்கு உரிய தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருப்புகழ் என்னும் நாண்மலர்களிலிருந்து எடுத்தமைக்கப்பட்ட பூங்கொத்து ஆகும் "சோணகிரிச் சுழிமதுரைத் தேவாரப் பூங்கொத்து"—எனப் பெயரிய இந் நூல்.

பாண்டி நாட்டுத் தலங்களாகிய திருச்சுழியல், திருவாலவாயுடன் திருவண்ணாமலையை உடன்படுத்தும் தொடர்பு யாதோ எனில், அத் தொடர்பு திருச்சுழியலில் தோன்றித் திருவாலவாயில் (மதுரையில்) நடமாடித் திருவண்ணாமலையில் அமர்ந்தருளும் பகவான் ஒருவர் உளரே அவரே யாவர்.

மேலும், இத் தொடர்பை—

திருமேனி நாதாங்கின் செம்மேனி அண்ணா<br>
உருமேனி யாய்நின்ற ஒப்பில்—ஒருமூல<br>
காரணத்தால் அண்ணாவும் கண்ணார் திருச்சுழியும்<br>
பூரணத்தால் ஒன்றும் பொலிந்து—

எனவும் கூறிப் பொருத்தலாகும். பின்னும், திருச்சுழியலினும், திருவண்ணாமலையினும் பார்வதி தேவியாரும்

கௌதம முனிவரும் இறைவனைப் பூசித்துப் பேறுபெற்ற ஒரு தொடர்பும் உளதல்லவா?

இப்பூங்கொத்தின் வாடா மணத்தையும் தெவிட்டாத் தேனையும் பக்தராம் வண்டுகள் நாடிச் சென்று நலம் பெறுவான் வேண்டிய நன்னோக்குடன் இந்நூலை ஸ்ரீ ரமண பாதாநந்த சுவாமி என்னும் பெரியார் வெளியிடுகின்றனர். அவர் தமது உயிர்த்தோழரும் தமது பாராட்டுக்குப் பெரிதும் உரித்தானவருமான ஸ்ரீ முகவைக் கண்ண முருகனார் அவர்கள் ஸ்ரீ ரமண சரணத் திருவகவலிற் கூறிய

"பாண்டிச் சுழியற் பதியோ டருணையை
ஈண்டித் தொடர்புற யாத்தோய் சரணம்"—

என்னுந் திருவாக்கின் உண்மையைக் கண்டு போற்றிப் பகவானது சார்புடைய திருச்சுழியல், திரு ஆலவாய், திருவண்ணமலை என்னும் மூன்று தலங்களுக்குரிய தேவார திருவாசக திருப்புகழ்ப் பாக்கள் தமிழ் மக்கள் நாவில் என்றும் வழங்கவேண்டும் என்னும் பேராசையால் இப் பூங்கொத்தைத் தமிழுலகுக்குத் தருகின்றனர். அவர் கருணையைத் தமிழுலகும் சைவ உலகும் என்றும் பாராட்டும்.

தேவாரப் பூங்கொத்தைச் செந்தமிழோர் பாராட்ட
மாவாரத் தோடே மகிழ்ந்தளித்தார்—ஏவார்
தரு ரமணர்ப் போற்றுந் தமிழ்மறையச் சிட்டுத்
தரு ரமண பாதாநந்தர்.

(தணிகைமணி ராவ்பஹதூர்)
வ. சு. செங்கல்வராய பிள்ளை,
எம். ஏ.

சென்னை
12—12—1943

# I. திருவண்ணாமலை

## திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

### (i) பண் - நட்டபாடை (ராகம் - நாட்டை)

திருச்சிற்றம்பலம்

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே. க

தேமாங்கனி கடுவன்கொள விடுகொம்பொடு தீண்டித்
தூமாமழை துறுவன்மிசை சிறுநுண்டுளி சிதற
ஆமாம்பிணை யணையும்பொழி லண்ணாமலை யண்ணல்
பூமாங்கழல் புனைசேவடி நினைவார்வினை யிலரே. உ

பீலிம்மயில் பெடையோடுறை பொழில்சூழ்கழை முத்தம்
சூலிம்மணி தரைமேனிறை சொரியும்விரி சாரல்
ஆலிம்மழை தவழும்பொழி லண்ணாமலை யண்ணல்
காலன்வலி தொலைசேவடி தொழுவாரன புகழே. ங

உதிரும்மயி ரிடுவெண்டலை கலனாவுல கெல்லாம்
எதிரும்பலி யுணலாகவு மெருதேறுவ தல்லால்
முதிருஞ்சடை யிளவெண்பிறை முடிமேல்கொள அடிமேல்
அதிருங்கழ லடிகட்கிட மண்ணாமலை யதுவே. ச

மரவஞ்சிலை தரளம்மிகு மணியுந்துவெள் ளருவி
அரவஞ்செய முரவம்படு மண்ணாமலை யண்ணல்
உரவஞ்சடை யுலவும்புன லுடனாவது மோரார்
குரவங்கமழ் நறுமென்குழ லுமைபுல்குதல் குணமே. ௫

பெருகும்புன லண்ணாமலை பிறைசேர்கடல் நஞ்சைப்
பருகுந்தனை துணிவார்பொடி யணிவாரது பருகிக்
கருகும்மிட றுடையார்கமழ் சடையார்கழல் பரவி
உருகும்மன முடையார்தமக் குறுநோயடை யாவே. ௬

கரிகாலன குடர்கொள்வன கழுகாடிய காட்டில்
நரியாடிய நகுவெண்டலை யுதையுண்டவை யுருள
எரியாடிய இறைவர்க்கிட மினவண்டிசை முரல
அரியாடிய கண்ணாளொடு மண்ணாமலை யதுவே. ௭

ஒளிறூபுலி யதளாடைய னுமையஞ்சுதல் பொருட்டால்
பிளிறூகுரல் மதவாரண வதனம்பிடித் துரித்து
வெளிறூபட விளையாடிய விகிர்தன்னிரா வணனை
அளறூபட அடர்த்தானிட மண்ணாமலை யதுவே. ௮

விளவார்கனி படநூறிய கடல்வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவண மழலாகிய அண்ணாமலை யண்ணல்
தளராமுலை முறுவல்லுமை தலைவன்னடி சரணே. ௯

வேர்வந்துற மாசூர்தர வெயில்நின்றுழல் வாரும்
மார்பம்புதை மலிசீவர மறையார்வரு வாரும்
ஆரம்பர்த முரைகொள்ளன்மின் அண்ணாமலை யண்ணல்
கூர்வெண்மழுப் படையான்நல்ல கழல்சேர்வது குணமே. ௧௦

வெம்புந்திய கதிரோனொளி விலகும்விரி சாரல்
அம்புந்திமூ வெயிலெய்தவ னண்ணுமலை யதனைக்
கொம்புந்துவ குயிலாலுவ குளிர்காழியுள் ஞான
சம்பந்தன தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே. கக

திருச்சிற்றம்பலம்

—: :—

ii. பண் - தக்கேசி (ராகம் - காம்போதி)

திருச்சிற்றம்பலம்

பூவார் மலர்கொண் டடியார் தொழுவார் புகழ்வார் வானோர்கள்
மூவார் புரங்க ளெரித்த வன்று மூவர்க் கருள்செய்தார்
தூமா மழைநின் றதிர வெருவித் தொறுவின் னிரையோடும்
ஆமாம் பிணைவந் தணையுஞ் சார லண்ணா மலையாரே. க

மஞ்சைப் போழ்ந்த மதியஞ் சூடும் வானோர் பெருமானார்
நஞ்சைக் கண்டத் தடக்கு மதுவும் நன்மைப் பொருள்போலும்
வெஞ்சொற் பேசும் வேடர் மடவா ரிதண மதுவேறி
அஞ்சொற் கிளிக ளாயோ வென்னு மண்ணா மலையாரே. உ

ஞானத் திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார்மேல்
ஊனத் திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்போலும்
ஏனத் திரளோ டினமான் கரடி யிழியு மிரவின்கண்
ஆனைத் திரள்வந் தணையுஞ் சார லண்ணா மலையாரே. ந

இழைத்த இடையா ளுமையாள் பங்க ரிமையோர் பெருமானார்
தழைத்த சடையார் விடையொன் றேறித் தரியார் புரமெய்தார்
பிழைத்த பிடியைக் காணா தோடிப் பெருங்கை மதவேழம்
அழைத்துத் திரிந்தங் குறங்குஞ் சார லண்ணா மலையாரே. ச

உருவிற் றிகழு முமையாள் பங்க ரிமையோர் பெருமானார்
செருவில் லொருகால் வளைய வூன்றிச் செந்தீ யெழுவித்தார்
பருவிற் குறவர் புனத்திற் குவித்த பருமா மணிமுத்தம்
அருவித் திரளோ டிழியுஞ் சார லண்ணா மலையாரே. ௫

ஏனத்தோ ரூழி யடியா ரேத்த இமையோர் பெருமானார்
நினைத்துத் தொழுவார் பாவந் தீர்க்கும் நிமல ருறைகோயில்
கனைத்த மேதி காணா தாயன் கைம்மேற் குழலூத
அனைத்துஞ் சென்று திரளுஞ் சார லண்ணா மலையாரே. ௬

வந்தித் திருக்கு மடியார் தங்கள் வருமேல் வினையோடு
பந்தித் திருந்த பாவந் தீர்க்கும் பரம னுறைகோயில்
முந்தி யெழுந்த முழவி னோசை முதுகல் வரைகள்மேல்
அந்திப் பிறைவந் தணையுஞ் சார லண்ணா மலையாரே. ௭

மறந்தான் கருதி வலியை நினைந்து மாறா யெடுத்தான்றோள்
நிறந்தான் முரிய நெரிய வூன்றி நிறைய வருள்செய்தார்
திறந்தான் காட்டி யருளா யென்று தேவ ரவர்வேண்ட
அறந்தான் காட்டி யருளிச் செய்தா ரண்ணா மலையாரே. ௮

தேடிக் காணார் திருமால் பிரமன் தேவர் பெருமானை
மூடி யோங்கி முதுவே யுகுத்த முத்தம் பலகொண்டு
கூடிக் குறவர் மடவார் குவித்துக் கொள்ள வம்மினென்
றாடிப் பாடி யளக்குஞ் சார லண்ணா மலையாரே. ௯

தட்டை யிடுக்கித் தலையைப் பறித்துச் சமணே நின்றுண்ணும்
பிட்டர் சொல்லுக் கொள்ள வேண்டா பேணித் தொழுமின்கள்
வட்ட முலையா ளுமையாள் பங்கர் மன்னி யுறைகோயில்
அட்ட மாளித் திரள்வந் தணையு மண்ணா மலையாரே. ௧௦

அல்லா டரவ மியங்குஞ் சார லண்ணு மலையாரை
நல்லார் பரவப் படுவான் காழி ஞான சம்பந்தன்
சொல்லான் மலிந்த பாட லான பத்து மிவைகற்று
வல்லா ரெல்லாம் வானோர் வணங்க மன்னி வாழ்வாரே.கக

திருச்சிற்றம்பலம்

——: :——

உ

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

### (i) திருநேரிசை (ராகம் - நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

ஓதிமா மலர்கள் தூவி உமையவள் பங்கா மிக்க
சோதியே துளங்கும் எண்தோள் சுடர்மழுப் படையினானே
ஆதியே அமரர் கோவே அணியணா மலையு ளானே
நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவி லேனே.

பண்டனை வென்ற இன்சொற் பாவையோர் பங்கா நீல
கண்டனே கார்கொள் கொன்றைக் கடவுளே கமல பாதா
அண்டனே அமரர் கோவே அணியணா மலையு ளானே
தொண்டனேன் உன்னையல்லாற் சொல்லுமா சொல்லி லேனே.

உருவமும் உயிரு மாகி ஓதிய உலகுக் கெல்லாம்
பெருவினைப் பிறப்பு வீடாய் நின்ற எம் பெருமான் மிக்க
அருவிபொன் சொரியும் அண்ணா மலையுளாய் அண்டர்கோவே
மருவிநின் பாத மல்லால் மற்றொரு மாடி லேனே.

பைம்பொனே பவளக் குன்றே பரமனே பால்வெண் ணீற்றாய்
செம்பொனே மலர்செய் பாதா சீர்தரு மணியே மிக்க
அம்பொனே கொழித்து வீழும் அணியணா மலையு ளானே
எம்பொனே உன்னை அல்லால் யாதுநான் நினைவி லேனே.

பிறையணி முடியி னானே பிஞ்ஞகா பெண்ணோர் பாகா
மறைவலா இறைவா வண்டார் கொன்றையாய் வாமதேவா
அறைகழல் அமரர் ஏத்தும் அணியணா மலையு ளானே
இறைவனே உன்னை அல்லால் யாதுநான் நினைவி லேனே.

புரிசடை முடியின் மேலோர் பொருபுனற் கங்கை வைத்துக்
கரியுரி போர்வை யாகக் கருதிய கால காலா
அரிகுலம் மலிந்த அண்ணா மலையுளாய் அலரின் மிக்க
வரிமிகு வண்டு பண்செய் பாதநான் மறப்பி லேனே.

இரவியும் மதியும் விண்ணும் இருநிலம் புன லுங் காற்றும்
உரகமார் பவனம் எட்டுத் திசையொளி உருவ மானாய்
அரவுமிழ் மணிகொள் சோதி அணியணா மலையு ளானே
பரவுநின் பாத மல்லாற் பரமநான் பற்றி லேனே.

பார்த்தனுக் கன்று நல்கிப் பாசுப தத்தை ஈந்தாய்
நீர்த்ததும் புலாவு கங்கை நெடுமுடி நிலாவ வைத்தாய்
ஆர்த்துவந் தீண்டு கொண்டல் அணியணா மலையு ளானே
தீர்த்தனே நின்றன் பாதத் திறமலால் திறமி லேனே.

பா லுநெய் முதலா மிக்க பசுவில்ஐந் தாடு வானே
மா லுநான் முகனுங் கூடிக் காண்கிலா வகையுள் நின்றாய்
ஆலுநீர் கொண்டல் பூகம் அணியணா மலையு ளானே
வா லுடை விடையாய் உன்றன் மலரடி மறப்பி லேனே.

இரக்கமொன் றியாது மில்லாக் காலனைக் கடிந்த எம்மான்
உரத்தினால் வரையை ஊக்க ஒருவிரல் நுதியி னாலே
அரக்கனை நெரித்த அண்ணா மலையுளாய் அமரர் ஏறே
சிரத்தினால் வணங்கி ஏத்தித் திருவடி மறப்பி லேனே.

திருச்சிற்றம்பலம்

———:: ———

## (ii) திருக்குறுந்தொகை (ராகம் - நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

வட்ட னைம்மதி சூடியை வானவர்
சிட்ட னைத்திரு அண்ணா மலையனை
இட்ட னையிகழ்ந் தார்புர மூன்றையும்
அட்ட னையடி யேன்மறந் துய்வனே.

வான னைம்மதி சூடிய மைந்தனைத்
தேன னைத்திரு அண்ணா மலையனை
ஏன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
ஆன னையடி யேன்மறந் துய்வனே

மத்த னைம்மத யானையு ரித்த எஞ்
சித்த னைத்திரு அண்ணா மலையனை
முத்த னைம்முனிந் தார்புர மூன்றெய்த
அத்த னையடி யேன்மறந் துய்வனே.

காற்ற னைக்கலக் கும்வினை போயறத்
தேற்ற னைத்திரு அண்ணா மலையனைக்
கூற்ற னைக்கொடி யார்புர மூன்றெய்த
ஆற்ற னையடி யேன்மறந் துய்வனே.

மின்ன னைவினை தீர்த்தெனை ஆட்கொண்ட
தென்ன னைத்திரு அண்ணா மலையனை
என்ன னையிகழ்ந் தார்புர மூன்றெய்த
அன்ன னையடி யேன்மறந் துய்வனே.

மன்றனைம்மதி யாதவன் வேள்விமேல்
சென்றனைத்திரு அண்ணா மலையனை
வென்றனைவெகுண் டார்புர மூன்றையுங்
கொன்றனைக்கொடி யேன்மறந் துய்வனே.

வீரனைவிடம் உண்டனை விண்ணவர்
தீரனைத்திரு அண்ணா மலையனை
ஊரனைஉண ரார்புர மூன்றெய்த
ஆரனைஅடி யேன்மறந் துய்வனே.

கருவினைக்கடல் வாய்விடம் உண்ட எம்
திருவினைத்திரு அண்ணா மலையனை
உருவினையுண ரார்புர மூன்றெய்த
அருவினையடி யேன்மறந் துய்வனே.

அருத்தனைஅர வைந்தலை நாகத்தைத்
திருத்தனைத்திரு அண்ணா மலையனைக்
கருத்தனைக்கடி யார்புர மூன்றெய்த
அருத்தனையடி யேன்மறந் துய்வனே.

அரக்கனையல றவ்விரல் ஊன்றிய
திருத்தனைத்திரு அண்ணா மலையனை
இரக்கமாயென் உடலுறு நோய்களைத்
துரக்கனைத்தொண்ட னேன்மறந் துய்வனே.

திருச்சிற்றம்பலம்

—— : : ——

(iii) திருக்குறுந்தொகை (ராகம் - நாதநாமக்கிரியை)

திருச்சிற்றம்பலம்

பட்டி ஏறுகந் தேறிப் பல இலம்
இட்ட மாக இரந்துண் டுழிதரும்
அட்ட மூர்த்தி அண் ணுமலை கைதொழக்
கெட்டுப் போம்வினை கேடில்லை காண்மினே.

பெற்றம் ஏறுவர் பெய்பலிக் கென்றவர்
சுற்ற மாமிகு தொல்புக ழாளொடும்
அற்றந் தீர்க்கும்அண் ணுமலை கைதொழ
நற்ற வத்தொடு ஞானத் திருப்பரே.

பல்லி லோடுகை ஏந்திப் பலஇலம்
ஒல்லை சென்றுணங் கல்கவர் வாரவர்
அல்லல் தீர்க்கும் அண்ணுமலை கைதொழ
நல்ல வாயின நம்மை அடையுமே.

பாடிச் சென்று பலிக்கென்று நின்றவர்
ஓடிப் போயினர் செய்வதொன் றென்கொலோ
ஆடிப் பாடி யண்ணுமலை கைதொழ
ஓடிப் போகும்நம் மேலை வினைகளே.

தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண் ணுமலை கைதொழ
ஓடிப் போம் நம துள்ள வினைகளே.

கட்டி யொக்குங் கரும்பி னிடைத்துணி
வெட்டி வீணைகள் பாடும் விகிர்தனா்
அட்ட மூர்த்தியண் ணாமலை மேவிய
நட்ட மாடியை நண்ணநன் காகுமே.

கோணிக் கொண்டையர் வேடமுன் கொண்டவர்
பாணி நட்டங்க ளாடும் பரமனார்
ஆணிப் பொன்னின்அண் ணாமலை கைதொழப்
பேணி நின்ற பெருவினை போகுமே.

கண்டந் தான்கறுத் தான்கால னாருயிர்
பண்டு கால்கொடு பாய்ந்த பரமனார்
அண்டத் தோங்கும்அண் ணாமலை கைதொழ
விண்டு போகும்நம் மேலை வினைகளே.

மூந்திச் சென்றுமுப் போதும் வணங்குமின்
அந்தி வாயொளி யான்றன் அண் ணாமலை
சிந்தி யா எழு வார்வினை தீர்த்திடும்
கந்த மாமலர் சூடுங் கருத்தனே.

மறையி னானொடு மாலவன் காண்கிலா
நிறையும் நீர்மையுள் நின்றருள் செய்தவன்
உறையும் மாண்பின்அண் ணாமலை கைதொழப்
பறையும் நாஞ்செய்த பாவங்க ளானவே.

திருச்சிற்றம்பலம்,

—— : : ——

உ

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் - பழம்பஞ்சுரம் (ராகம் - சங்கராபரணம்)

திருச்சிற்றம்பலம்

தேனைக் காவல் கொண்டு விண்ட கொன்றைச் செழுந்தாராய்
வானைக் காவல் கொண்டு நின்றா ரறியா நெறியானே
ஆனைக் காவி லரனே பரனே யண்ணா மலையானே
ஊனைக் காவல் கைவிட் டுன்னை யுகப்பா ருணர்வாரே.

திருச்சிற்றம்பலம்

——: :——

உ

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம்

### க. போற்றித் திருவகவல்

அண்ணா மலையெம் அண்ணா போற்றி
கண்ணா ரமுதக் கடலே போற்றி (149 - 150)

### உ. திருவெம்பாவை

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்

பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி யித்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

### ௬. திருவம்மானை

விண்ணாளுந் தேவர்க்கு மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கு மாண்பாகி நின்றானைத்
தண்ணார் தமிழளிக்குந் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையிற்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய். ௧

—: :—

# II. திருச்சுழியல்

௨

## சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

பண் - நட்டராகம் (ராகம் - பந்துவராளி)

திருச்சிற்றம்பலம்

ஊனாயுயிர் புகலாயக லிடமாய்முகில் பொழியும்
வானாய்வரு மதியாய்விதி வருவானிடம் பொழிலின்
தேனாதரித் திசைவண்டின மிழற்றுந்திருச் சுழியல்
நானாவித நினைவார்தமை நலியார்நமன் தமரே. ௧

துண்டோர்மழுப் படையான்மழ விடையானெழு கடல்நஞ்
சுண்டேபுர மெரியச்சிலை வளைத்தானிமை யவர்க்காத்
திண்டேர்மிசை நின்றானவ னுறையுந்திருச் சுழியல்
தொண்டேசெய வல்லாரவர் நல்லார்துய ரிலரே. உ

கவ்வைக்கடல் கதறிக்கொணர் முத்தங்கரைக் கேற்றக்
கொவ்வைத்துவர் வாயார்குடைந் தாடுந்திருச் சுழியல்
தெய்வத்தினை வழிபாடுசெய் தெழுவாரடி தொழுவார்
அவ்வத்திசைக் கரசாகுவ ரலராள்பிரி யாளே. ௩

மலையான்மகள் மடமாதிட மாகத்தவண் மற்றுக்
கொலையானையி னுரிபோர்த்தவெம் பெருமான்திருச் சுழியல்
அலையார்சடை யுடையானடி தொழுவார்பழு துள்ளம்
நிலையார்திகழ் புகழால்நெடு வானத்துயர் வாரே. ௪

உற்றான்நமக் குயருமமதிச் சடையான்புல னைந்தும்
செற்றார்திரு மேனிப்பெரு மானூர்திருச் சுழியல்
பெற்றானினி துறையத்திறம் பாமைத்திரு நாமம்
கற்றாரவர் கதியுட்செல்வ ரேத்தும்மது கடனே. ௫

மலந்தாங்கிய பாசப்பிறப் பறுப்பீர்துறைக் கங்கைச்
சலந்தாங்கிய முடியானமர்ந் திடமாந்திருச் சுழியல்
நிலந்தாங்கிய மலராற்கொழும் புகையால்நினைந் தேத்தும்
தலந்தாங்கிய புகழான்மிகு தவமாஞ் சதுராமே. ௬

சைவத்தசெவ் வுருவன்திரு நீற்றன்னுரு மேற்றன்
கைவைத்தொரு சிலையாலரண் மூன்றுமெரி செய்தான்
தெய்வத்தவர் தொழுதேத்திய குழகன்திருச் சுழியல்
மெய்வைத்தடி நினைவார்வினை தீர்தல்லெளி தன்றே. ௭

பூவேந்திய பீடத்தவன் றானுமட லரியுங்
கோவேந்திய வினயத்தொடு குறுகப்புக லறியார்
சேவேந்திய கொடியானவ னுறையுந்திருச் சுழியல்
மாவேந்திய கரத்தானெம சிரத்தான்றன தடியே. ௮

கொண்டாடுதல் புரியாவரு தக்கன்பெரு வேள்வி
செண்டாடுதல் புரிந்தான்றிருச் சுழியற்பெரு மானைக்
குண்டாடிய சமணாதர்கள் குடைச்சாக்கிய ரறியா
மிண்டாடிய வதுசெய்தது வானால்வரு விதியே. ௯

நீரூர்தரு நிமலன்திரு மலையார்க்கய லருகே
தேரூர்தரு மரக்கன்சிர நெரித்தான்திருச் சுழியல்
பேரூரென வுறைவானடி பெயர்நாவலர் கோமான்
ஆரூரன தமிழ்மாலைபத் தறிவார்துய ரிலரே. ௰

திருச்சிற்றம்பலம்

——::——

௨

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருக்கோவையார்

அன்புடை நெஞ்சத் திவள்பே தூற அம் பலத்தடியார்
என்பிடை வந்தமிழ் தூறநின் றாடி யிருஞ்சுழியல்
தன்பெடை நையத் தகவழிந் தன்னஞ் சலஞ்சலத்தின்
வன்பெடை மேல்துயி லும்வய லூரன் வரம்பிலனே.

உ

# III. திரு ஆலவாய் (மதுரை)

## திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

(i) பண் - குறிஞ்சி (ராகம் - சுருட்டி)

திருச்சிற்றம்பலம்

நீல மாமிடற், ருல வாயிலான்
பால தாயினர், ஞால மாள்வரே.

அடிக் ளாலவாய்ப், படிகொள் சம்பந்தன்
முடிவி ன்தமிழ், செடிகள் நீக்குமே.

(ii) பண் - காந்தாரம் (நவரோஸ்)

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆல வாயான் திருநீறே.

ஆற்ற லடல்விடை யேறு மாலவா யான்திரு நீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞானசம் பந்தன்
தேற்றித் தென்ன னுடலுற்ற தீப்பிணி யாயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே.

(iii) பண் - கௌசிகம் (ராகம்-பைரவி)

வீட லால வாயிலாய் விழுமி யார்கள் நின்கழல்
பாட லால வாயிலாய் பரவ நின்ற பண்பனே
காட லால வாயிலாய் கபாலி நீள்க டிம்மதில்
கூட லால வாயிலாய் குலாய தென்ன கொள்கையே.

குற்றநீ குணங்கள்நீ கூட லால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந் திலங்கு சோதிநீ
கற்றநூற் கருத்துநீ யருத்த மின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்துமுன் னுரைப்ப தென்மு கம்மனே.

போயநீர் வளங்கொளும் பொருபுனற் புகலியான்
பாய கேள்வி ஞானசம் பந்தன் நல்ல பண்பினல்
ஆய சொல்லின் மாலைகொண் டால வாயி லண்ணலைத்
தீய தீர எண்ணுவார்கள் சிந்தை யாவர் தேவரே.

(iv) பண் - பழம்பஞ்சுரம் (ராகம் - சங்கராபரணம்)

ஆல நீழ லுகந்ததி ருக்கையே
யான பாட லுகந்த திருக்கையே
பாலி னேர்மொழி யாளொரு பங்கனே
பாத மோதலர் சேர்புர பங்கனே
கோல நீறணி மேதகு பூதனே
கோதிலார் மன மேவிய பூதனே
ஆல நஞ்சமு துண்ட களத்தனே
ஆலவா யுறை யண்டர்க ளத்தனே.

ஈன ஞானிகள் தம்மொடு விரகனே
ஏறு பல்பொருள் முத்தமிழ் விரகனே
ஆன காழியுள் ஞானசம் பந்தனே
ஆலவாயினின் மேயசம் பந்தனே
ஆன வானவர் வாயினுளத்தனே
அன்ப ரானவர் வாயினுளத்தனே
நானுரைத்தன செந்தமிழ் பத்துமே
வல்ல வர்க்கிவை நற்றமிழ் பத்துமே.

திருச்சிற்றம்பலம்

(v) பண் - புறநீர்மை (ராகம் - பூபாளம்)

திருச்சிற்றம்பலம்

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாள்தொறும் பரவப்
பொங்கழ லுருவன் பூதநா யகனால்
வேதமும் பொருள்களு மருளி
அங்கயற் கண்ணி தன்னொடு மமர்ந்த
ஆலவா யாவது மிதுவே. க

பன்னலம் புணரும் பாண்டிமா தேவி
குலச்சிறை யெனுமிவர் பணியும்
அந்நலம் பெறுசீர் ஆலவா யீசன்
திருவடி யாங்கவை போற்றிக்
கன்னலம் பெரிய காழியுள் ஞான
சம்பந்தன் செந்தமி ழிவைகொண்
டின்னலம் பாட வல்லவர் இமையோர்
ஏத்தவீற் றிருப்பவர் இனிதே. உ

திருச்சிற்றம்பலம்

———: :———

உ

## திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்

(i) திருநேரிசை (ராகம் - நவரோஸ்)

திருச்சிற்றம்பலம்

வேதியா வேத கீதா விண்ணவ ரண்ணா என்றென்
றோதியே மலர்கள் தூவி ஒருங்கிநின் கழல்கள் காணப்
பாதியோர் பெண்ணை வைத்தாய் படர்சடை மதியஞ் சூடும்
ஆதியே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே.

நம்பனே நான்மு கத்தாய் நாதனே ஞான மூர்த்தி
என்பொனே ஈசா என்றென் றேத்திநான் ஏசற் றென்றும
பின்பினே திரிந்து நாயேன் பேர்த்தினிப் பிறவா வண்ணம்
அன்பனே ஆல வாயில் அப்பனே அருள்செ யாயே.

ஒருமருந் தாகி யுள்ளாய் உம்பரோ டுலகுக் கெல்லாம்
பெருமருந் தாகி நின்றாய் பேரமு தின்சு வையாய்க்
கருமருந் தாகி யுள்ளாய் ஆளும்வல் வினைகள் தீர்க்கும்
அருமருந் தால வாயில் அப்பனே அருள் செயாயே.

திருச்சிற்றம்பலம்

## (ii) திருத்தாண்டகம் - (ராகம் ஹரிகாம்போதி)

திருச்சிற்றம்பலம்

முளைத்தானை யெல்லார்க்கும் முன்னே தோன்றி
முதிருஞ் சடைமுடிமேல் முகிழ்வெண் திங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கள் மூன்றும்
வரைசிலையா வாசுகிமா நாணாக் கோத்துத்
தொளைத்தானைச் சுடுசரத்தால் துவள நீறாத்
தூமுத்த வெண்முறுவ லுமையோ டாடித்
திளைத்தானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த்திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

தூர்த்தனைத் தோள்முடிபத் திறுத்தான் தன்னைத்
தொன்னரம்பின் இன்னிசைகேட் டருள்செய்தானைப்
பார்த்தனைப் பணிகண்டு பரிந்தான் தன்னைப்
பரிந்தவற்குப் பாசுபதம் ஈந்தான் தன்னை
ஆத்தனை யடியேனுக் கன்பன் தன்னை
யளவிலாப் பல்லூழி கண்டு நின்ற
தீர்த்தனைத் தென்கூடல் திருவாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே.

—: :—

உ

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளியது

## திருவாசகம்

### (i) கீர்த்தித் திருவகவல்

மதுரைப் பெருநன் மாநக ரிருந்து
குதிரைச் சேவக னாகிய கொள்கையும் (44-45)

### (ii) போற்றித் திருவகவல்

ஆடக மதுரை அரசே போற்றி
கூடல் இலங்கு குருமணி போற்றி (90-91)

### (iii) திருவம்மானை

பண்சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண்சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண்சுமந்த கீர்த்தி வியன்மண்ட லத்தீசன்
கண்சுமந்த நெற்றிக் கடவுள் கலி மதுரை
மண்சுமந்து கூலிகொண் டக்கோவால் மொத்துண்டு
புண்சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

### (iv) திருப்பூவல்லி

திண்போர் விடையான் சிவபுரத்தார் போரேறு
மண்பால் மதுரையிற் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட
புண்பாடல் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

### (v) திருப்பாண்டிப் பதிகம்

சதுரை மறந்தறி மால்கொள்வர் சார்ந்தவர் சாற்றிச் சொன்னோம்
கதிரை மறைத்தன்ன சோதி கழுக்கடை கைப்பிடித்துக்
குதிரையின் மேல்வந்து கூடிடு மேற்குடி கேடுகண்டீர்
மதுரையர் மன்னன் மறுபிறப் போட மறித்திடுமே.

—: :—

உ

## அருணகிரி சுவாமிகள் அருளிய

# திருப்புகழ்

## I திருவண்ணாமலை

1. குமர குருபர குணதர நிசிசர
திமிர தினகர சரவண பவகிரி
குமரி சுதபகி ரதிசுத சுரபதி குலமானுங்-

குறவர் சிறுமியு மருவிய திரள்புய
முருக சரணென வுருகுதல் சிறிதுமில்
கொடிய வினையனை யவலனை யசடனை யதிமோகக்;

கமரில் விழவிடு மழகுடை யரிவையர்
களவி னுெடுபொரு ளளவள வருளிய
கலவி யளறிடை துவளுறும் வெளிறனை யினிதாளக்-

கருணை யடியரொ டருணையி லொருவிசை
சுருதி புடைதர வருமிரு பரிபுர
கமல மலரடி கனவிலு நனவிலு மறவேனே ;

தமர மிகுதிரை யெறிவளை கடல்குடல்
மறுகி யலைபட விடநதி யுமிழ்வன
சமுக முககண பணபணி பதிநெடு வடமாகச்-

சகல வுலகமு நிலைபெற நிறுவிய
கனக கிரிதிரி தரவெகு கரமலர்
தளர வினியதொ ரமுதினை யொருதனி கடையாநின்;

றமரர் பசிகெட வுதவிய க்ருபைமுகில்
அகில புவனமு மளவிடு குறியவன்
அளவு நெடியவ னளவிட அரியவன் மருகோனே-

அரவு புனைதரு புநிதரும் வழிபட
மழலை மொழிகொடு தெளிதர வொளிதிகழ்
அறிவை யறிவது பொருளென அருளிய பெருமாளே.

---

2. கருணை சிறிதுமில் பறிதலை நிசிசரர்
பிசித அசனம றவரிவர் முதலிய
கலக விபரித வெகுபர சமயிகள் பலர்கூடிக்-

கலக லெனநெறி கெடமுறை முறைமுறை
கதறி வதறிய குதறிய கலைகொடு
கருத அரியதை விழிபுனல் வரமொழி குழறுவன்;

புருகி யுனதருள் பரவுகை வரில்விர
கொழியி லுலகியல் பிணைவிடி லுரைசெய
லுணர்வு கெடிலுயிர் புணரிரு வினையள றதுபோக-

உதறி லெனதெனு மலமறி லறிவினி
லெளிது பெறவென மறைபறை யறைவதொ
ருதய மரணமில் பொருளினை யருளுவ தொருநாளே;

தருண சததள பரிமள பரிபுர
சரணி தமனிய தநுதரி திரிபுர
தகனி கவுரிப வதிபக வதிபயி ரவிசூலி-

சடில தரியநு பவையுமை திரிபுரை
சகல புவனமு முதவிய பதிவ்ருதை
சமய முதல்வித னயபகி ரதிசுத சதகோடி;

அருண ரவியினு மழகிய ப்ரபை விடு
கருணை வருணித தனுபர குருபர
அருணை நகருறை சரவண குரவணி புயவேளே-

அடவிச ரர்குல மரகத வனிதையு
மமரர் குமரியு மனவர தமுமரு
கழகு பெறநிலை பெறவர மருளிய பெருமாளே.

3. வலிவாத பித்தமொடு களமாலை விப்புருதி
வறள்சூலை குட்டமொடு குளிர்தாகம்-
மலிநீ ரிழிச்சல்பெரு வயிறீளை கக்குகளை
வருநீ ரடைப்பினுடன் வெகுகோடி ;
சிலைநோ யடைத்தவுடல் புவிமீ தெடுத்துழல்கை
தெளியா வெனக்குமினி முடியாதே-
சிவமார் திருப்புகழை எனுனு வினிற்புகழ
சிவஞான சித்திதனை யருள்வாயே ;
தொலையாத பத்தியுள திருமால் களிக்கவொரு
சுடர்வீசு சக்ரமதை யருள்ஞான-
துவர்வேணி யப்பன்மிகு சிவகாமி கர்த்தன்மிகு
சுகவாரி சித்தனருள் முருகோனே;
அலைசூரன் வெற்புமரி முகனுனை வத்திரனு
டசுரா ரிறக்கவிடு மழல்வேலா-
அமுதா சனத்திகுற மடவாள் கரிப்பெண்ணுடும்
அருணு சலத்திலுறை பெருமாளே.

---

4. தமர குரங்களுங் காரி ருட்பி ழம்பு
மெழுகிய அங்கமும் பார்வையிற்கொ ளுந்து
தழலுமிழ் கண்களுங் காளமொத்த கொம்பு
முளகதக் கடமாமேல்-
தனிவரு மந்தகன் பாசம் விட்டெ றிந்து
அடவரு மென்றுசிந் தாகு லத்தி ருந்து
தமரழ மைந்தருஞ் சோக முற்றி ரங்க
மரணபக் குவமாநாள் ;

கமல முகங்களுங் கோம ளத்தி லங்கு
நகையு நெடுங்கணுங் காதி னிற்று லங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்க
தழுமடற் சுடர்வேலுங்-

கடிதுல கெங்கணுந் தாடி யிட்டு வந்த
மயிலுமி லங்கலங் கார பொற்ச தங்கை
கழலொலி தண்டையங் காலு மொக்க வந்து
வரமெனக் கருள்கூர்வாய்;

இமகிரி வந்தபொன் பாவை பச்சை வஞ்சி
அகில தலம்பெறும் பூவை சத்தி யம்பை
யிளமுலை யின்செழும் பால்கு டித்தி லங்கு
மியல் நிமிர்த்திடுவோனே-

இறைவ ரிறைஞ்சநின் முக மப்ர சங்க
முரைசெய் திடும்ப்ரசண் டாவி சித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூரு டற்பிளந்த
அயிலுடைக் கதிர்வேலா;

அமண ரடங்கலுங் கூட லிற்றி ரண்டு
கழுவி லுதைந்துதைந் தேற விட்டு நின்ற
அபிநவ துங்ககங் காந திக்கு மைந்த
அடியவர்க் கெளியோனே.

அமரர் வணங்குகந் தாகு றத்தி கொங்கை
தனில்முழு குங்கடம் பாமி குத்த செஞ்சொ
லருணை நெடுந்தடங் கோபு ரத்த மர்ந்த
அறுமுகப் பெருமாளே

5. இரவு பகற் பலகாலும்—இயலிசைமுத் தமிழ்கூறித்;
திரமதனைத் தெளிவாகத்—திருவருளைத் தருவாயே;
பரகருணைப் பெருவாழ்வே—பரசிவதத் துவஞான;
அரனருள்சற் புதல்வோனே—அருணகிரிப் பெருமாளே.

---

6. சிவமா துடனே அநுபோ கமதாய்
சிவஞா னமுதே பசியாறித்-
திகழ்வோ டிருவோ ரொருரூ பமதாய்
திகைலோ கமெலா மநுபோகி;

இவனே யெனமா லயனோ டமரோ
ரிளையோ னெனவே மறையோத-
இறையோ னிடமாய் விளையா டுகவே
யியல்வே லுடன் மா அருள்வாயே;

தவலோ கமெலா முறையோ வெனவே
தழல்வேல் கொடுபோ யசுராரைத்-
தலைதூள் படஏழ் கடல்தூள் படமா
தவம்வாழ் வுறவே விடுவோனே;

கவர்பூ வடிவாள் குறமா துடன்மால்
கடனு மெனவே அணைமார்பா-
கடையேன் மிடிதூள் படநோய் விடவே
கனல்மால் வரைசேர் பெருமாளே.

—:·:—

உ

## II. மதுரை (கூடல்)

1. கலைமேவு ஞானப் பிரகாசக்—
    கடலாடி ஆசைக் கடலேறி ;
பலமாய வாதிற் பிறழாதே—
    பதிஞான வாழ்வைத் தருவாயே ;
மலைமேவு மாயக் குறமாதின்—
    மனமேவு வாலக் குமரேசா ;
சிலைவேட சேவற் கொடியோனே—
    திருவாணி கூடற் பெருமாளே.

---

2. நீதத் துவமாகி—
    நேமத் துணையாகிப்;
பூதத் தயவான—
    போதைத் தருவாயே ;
நாதத் தொனியோனே—
    ஞானக் கடலோனே;
கோதற் றமுதானே—
    கூடற் பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

——: :——

THE JUPITER PRESS, LTD., MADRAS.